| O.S.No. 362/2019 | DW1: திருமதி. ராணியம்மாள்<br>க/பெ. திரு. பழனி | 09-04-2025 |
| --- | --- | --- |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. 3–ம் பிரதிவாதியும், 5–ம் பிரதிவாதியும் சேர்ந்து உருவாக்கிய ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர் என்றால் ஞாபகமில்லை. அதில் 1–ஆவது சாட்சி ரமேஷ் ஆவார். 3–ம் பிரதிவாதி செல்வம் 5–ம் பிரதிவாதி வெங்கடேசனுக்கு எவ்வளவு தொகை கொடுத்து ஆவணம் எழுதினார் என்றால் வெங்கடேசன் யார் என்றே எனக்கு தெரியாது. 5–ம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று 3–ம் பிரதிவாதியை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். உண்மையில் பணம் கொடுக்கவில்லை என்றாலும், ஒப்புக்காக வாதிகளை ஏமாற்றவேண்டும் என்கின்ற நோக்கத்திற்கான உருவாக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

2. தாவாவில் சொத்து விவரத்தின் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். தவறான சர்வே எண் குறிப்பிடப்பட்டது என்பதற்கு வாதிகளுக்கு எதிராக நோட்டீஸோ புகாரோ கொடுத்தீர்களா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சரியான மறுபயனுக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மறுபயன் என்றால் என்னவென்று தெரியுமா என்றால் என் கணவருக்குத்தான் தெரியும். அந்த சமயத்தில் என் கணவர் உயிருடன் இருந்தார். வாதிகள் அவர்களுடைய நிலத்தை விற்று பணம் கொடுத்ததால் அவ்வாறு விற்கப்பட்ட நிலத்தினை மீண்டும் வாங்கி கொடுக்க முடியுமா என்றால் நாங்கள் விற்ற நிலத்தை வாதிகளை மீட்டு கொடுக்க சொல்லுங்கள் நாங்கள் மீட்டு கொடுக்கிறோம்.

3. வாதிகள் கொடுத்த பணத்தினை 3 ஆண்டுகள் கழித்து கேட்பதால் அவர்கள் அதனை இழக்க நேரிடும் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயத்தை எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வாதிகள் காலம் கடந்து பணம் கேட்கிறார்கள் என்று அவர்களுக்கு எதிராக நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணமானது எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 26-02-2008 தேதியன்று ஏற்பட்டது.

4. பொது அதிகாரம் எழுதிக்கொடுத்தற்கு பிறகு நிலத்தினை பார்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் நாங்கள் போய் பார்ப்போம். தாவா இடத்தில் வாதிகள் வீடு கட்டியதை தடுத்தீர்களா என்றால் எங்களை கேட்காமல் கட்டியதால் தடுத்தோம். அவ்வாறு வாதிகள் வாதிகள் வீடு கட்டியதை எதிர்த்து நோட்டீஸோ, காவல் நிலையத்தில் புகாரோ கொடுத்தீர்களா என்றால் இல்லை. தாவா இடத்தில் வாதிகள் வீடு கட்டுவதை 2 முதல் 5 பிரதிவாதிகள் தடுத்தார்களா என்றால் இல்லை.

5. வாதிகள் தாவா இடத்தில் ரூ.1,500/- மின் இணைப்பிற்காக டெப்பாசிட் செய்ததை எதிர்த்து நோட்டீஸ் அல்லது ஆட்சேபணை ஏதேனும் செய்தீர்களா என்றால் இல்லை, மின் இணைப்பு என்னுடைய பெயரில்தான் உள்ளது. தாவா இடத்தில் வாதிகள் குடிநீர் இணைப்பு எடுத்துள்ளார்கள் என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, வாதிகள் வீடு கட்டிய விஷயமே எனக்கு தெரியாது. தாவா இடத்தில் எந்த பகுதியில் வாதிகள் வீடு கட்டினார்கள் என்று பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. வாதிகள் தாவா இடத்தில் வீட்டு வரி ரசீதுகள் செலுத்தியதாக வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

6. தாவா இடத்தில் வாதிகள் 200 அடி போர் போட்டுள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்ககு தெரியாது. தாவா இடத்தில் வாதிகள் சமன்படுத்தினார்கள் என்ற விஷயம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா இடத்தில் வாதிகள் வீடு கட்டி வசிக்கிறார்கள் என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. 4-வது ஆளுக்கு ரூ.1,25,000/-க்கு விற்பகவேண்டிய அவசியம் என்ன என்றால் என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் விற்றோம். அது சம்மந்தமாக வாக்குமூலத்தில் ஏதேனும் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை.

7. தாவா இடத்திற்கு நிலவரி ஏதேனும் செலுத்தி கட்டியுள்ளீர்களா என்றால் இடத்தை வாங்கியவர்கள் கட்டியுள்ளார்கள். என் கணவரின் இறப்பு சான்றிதழ், அவருக்கு என்ன வகையான நோய் இருந்தது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதிகள் எங்களுக்கு எதிராக செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்ததனை எதிர்த்து பதில் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

8. வாதிகள் காவல் அலுவலர்களிடம் கொடுத்த புகார் குறித்து வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் இல்லை. 10-07-2018-ல் வாதிகள் கொடுத்த புகாரிற்கு CSR வழங்கினார்கள் என்றால் அவ்வாறு எனக்கு வழங்கவில்லை. 22.06.2008-ல் வாதிகள் தாசில்தாரிடம் கொடுத்த புகார் சம்மந்தமாக வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் அது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

9. 20-06-2008-ல் வாதிகள் தாவா இடத்தினை அளந்தபோது நாங்கள் தடுத்தோம் என்றால் அவர்கள் அளக்கவில்லை, நாங்கள் அளந்தபோது வாதிகள் தடுத்தார்கள். 22.08.2013-ல் வாதிகள் கலெக்டர், தாசில்தார் ஆகியோர்களிடம் கொடுத்த புகார் குறித்து பிரதிவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் அதுபோல் எந்த புகாரும் எனக்கு வரவில்லை. 31.09.2013-ல் வாதிகள் உள்ளூர் போலீசுக்கு கொடுத்த புகார் சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் அந்த மாதிரியான புகார் எதுவும் எனக்கு வரவில்லை.

10. தாவா சொத்து குறித்து வழக்கு எதுவும் வாதிகள் மீது போட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நிலத்தின் சுவாதீனம் இல்லாமல் எவ்வகையில் விற்பனை செய்தீர்கள் என்றால் சுவாதீனம் எங்களிடம்தான் இருந்தது, அதனால்தான் விற்பனை செய்தோம். 03-02-2005-ல் லோகநாதன் என்பவர் பத்திரத்துடன் ஒரு லெட்டர் கொடுத்துள்ளார் என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

11. முதல் பொது அதிகார ஆவணத்தில் நிலத்தினை சுவாதீனம் கொடுத்துள்ளோம் போன்ற விஷயங்களை சொல்லியுள்ளீர்களா என்றால் அது எனக்கு தெரியாது. இரண்டாம் பொது அதிகார பத்திரத்தில் வாதிகளுக்கு ஒப்பந்தம் போட்ட விஷயத்தை சொல்லியுள்ளீர்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது, என் கணவருக்குத்தான் தெரியும். நாங்கள் பொது அதிகாரம் கொடுத்த நபர்கள் நிலத்தினை அனுபவிக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் பெயரில் உள்ள அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

12. ரூ.8,10,000/-க்கு 5-ம் பிரதிவாதி வெங்கடேசனுக்கு கொடுத்த விஷயம் பற்றி என்னுடைய ஏஜெண்ட்டான 2-ம்

பிரதிவாதியிடம் கேட்டீர்களா என்றால் வெங்கடேசன் யார் என்றே எனக்கு தெரியாது. வாதிகள் அனுப்பிய நோட்டீஸுக்கு பதில் நோட்டீஸ் அனுப்பினீர்களா என்றால் எனக்கு எந்த நோட்டீஸும் வரவில்லை. 3, 4 பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் கொடுத்ததற்கு பிறகு அவர்கள் எவ்வகையில் விற்க இயலும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகளுடன் என் கணவர் எழுதிக்கொண்ட ஆவணத்தில் என் கணவரின் சகோதரர் ஏழுமலை என்பவர் என் வீட்டில் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் சரிதான்.

13. பொது அதிகாரம் கொடுத்தபோது என் கணவர், அவரது சகோதரர் ஏழுமலை உயிருடன் இருந்தார்கள். எனக்கும் என் கணவருக்கும் எந்தவொரு பிரச்சனையும் இல்லை. பொது அதிகார ஆவணங்களில் என் கணவரோ, அவரது சகோதரர் ஏழுமலையோ கையெழுத்து போடவில்லை என்றால் என் கணவர் போட்டார், ஏழுமலை போடவில்லை. தாவா நிலத்திற்கு 276/1 என்கின்ற பட்டா எந்த நிலத்திற்கு வழங்கப்பட்டது என்றால் அது என் கணவருக்குத்தான் தெரியும்.

14. என் கணவர் இரும்பேடு சேகருக்கு விற்ற நிலத்தில் ஏழுமலை வகையறாவினர் பயிர் வைக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அக்கராபாளையம் VAO, தலையாரி, தலைவர் ஆகியோர்களை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் விசாரித்துக்கொள்ளலாம். மூல பத்திரத்தினை ஒப்படைக்க தயாராக உள்ளீர்களா என்றால் தேவைப்பட்டால் ஒப்படைப்பேன். வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட 3 ஏக்கர் நிலத்திற்கு பணம் வாங்கிக்கொண்டுதான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். வாதிகளிடம்

சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று நோட்டீஸ் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

15. வாதிகள் 10 வருடங்களாக பயிர் வைத்துக்கொண்டிருந்தார்கள், அதன் பிறகு அவர்கள் வரவேயில்லை, அதனால் கிரயம் செய்து கொடுத்தோம். பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று வாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் இல்லை. வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்யும்போது முதல் பொது அதிகார பத்திரம்தான் எழுதிக்கொடுத்தோம் என்றாலும், இரண்டாவது பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் என் கணவர் இறந்த 10 வருடங்களாக வேலூர் அடுத்த பனஞ்சாவடி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் இல்லை.

16. பொது அதிகாரம் கொடுத்த நிலையில் பின்னர் அந்த சொத்தானது விற்கப்பட்டதற்கு பிறகு அந்த பொதுஅதிகாரத்திற்கு அதிகாரம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொது அதிகாரம் கொடுத்ததற்கு பிறகு எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் உள்ளதா என்றால் என்னை வழக்கில் சேர்த்ததால் நான் சாட்சியம் அளிக்கிறேன். சொத்து எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்று என் கணவருக்குத்தான் தெரியும். பட்டா எண்.290-க்கு நிலவரி யார் செலுத்தியது என்றால் என் கணவர்தான் கட்டினார்.

17. தாவாவில் எந்த சர்வே எண் மாறியுள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. எந்தெந்த சர்வே எண் நிலங்களை வாதிகளுக்கு விற்பதாக ஒப்பந்தத்தில் எழுதப்பட்டது என்றால் அது என் கணவருக்குத்தான் தெரியும். 19-03-1980-ல் என் கணவர் வாங்கிய

நிலத்தில் சண்முகம் செட்டியார் ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. பொது அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள ஜக்குபந்தி, சர்வே எண், தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டு வரி ரசீது பிரதிவாதிகள் செலுத்தியுள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா இடத்தில் எவ்வளவு பயிரிடக்கூடிய பரப்பு என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எங்களது நிலத்தினை எவ்வளவு ரூபாய்க்கு வாங்கியது என்று என் கணவருக்குத்தான் தெரியும். தாவா நிலத்திற்கான பத்திரம் பற்றிய விவரம் என் கணவருக்குத்தான் தெரியும்.

18. தாவா இடத்தினை என் கணவர் வாங்கும்போது அளந்து பார்த்தார், அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவா இடத்தினை நாங்கள் எந்த காலத்திலும் அளந்து பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா இடத்தில் என்னென்ன மரங்கள் இருந்தது என்றால் நாங்கள் அங்கு இருக்கும் போது சில மரங்கள் வைத்தோம். பட்டா மாற்றியது, மின் இணைப்பு மாற்றியதற்கு ஆவணம் ஏதேனும் போட்டுள்ளீர்களா என்றால் இல்லை. தாவா இடத்தில் வாதிகள்தான் பயிர் வைக்கிறார்கள் என்றால் இல்லை.

19. தாவா சொத்திற்கு அரசு அலுவலர்கள் எந்த ஆவணமும் எங்களுக்கு கொடுக்காததால்தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா நாங்கள் வாங்கிய பிறகு எங்கள் பெயரில்தான் உள்ளது. தாவா சொத்தான 3 ஏக்கருக்கான பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

20. தாவா இடமானது என்னுடைய பெயரில் இருப்பதால்தான் வாதிகளுக்கு பதிவு செய்து கொடுக்கவில்லை என்றாலும், என் கணவர் பெயரில் இருந்திருந்தால் அவர் பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றாலும் சரியல்ல. பொது அதிகாரம் வாங்கியவர்கள் வாதிகள் நிலத்தினை ஒப்படைக்கவேண்டும் என்று நோட்டீஸ் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. என் கணவரின் வேண்டுகோளை நான் புறக்கணித்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் பேச்சுப்படி நான் ஆவணம் எழுதித்தரவில்லை என்றால் சரியல்ல.

21. வாதிகள் வழக்கிற்காக மாற்று பரிகாரம் கேட்டிருந்தாலும், நிலத்தை பொருத்துதான் அவர்களுடைய முதல் பரிகாரம் என்றால் சரியல்ல. முதல் பொது அதிகார பத்திரத்தினை ரத்து செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் வாதிகளுக்கு கொடுத்த தேதி முடிந்துவிட்டதால் ரத்து செய்தோம். வாதிகளை ஏமாற்றி நில அபகரிப்பு செய்யவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு நிலத்தினை விற்பனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**